**செய்தி வெளியீடு எண் : 1166** **நாள் : 13.07.2022**

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் புதிய திட்டங்கள் குறித்து மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ அன்பரசன் அவர்கள் ஆய்வு

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) பட்ஜெட் கூட்டத் தொடர்களில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள் குறித்து மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் **திரு. தா.மோ அன்பரசன்** அவர்கள் இன்று (13.7.2022) கிண்டி, சிட்கோ தலைமையகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 14 அறிவிப்புகளில் 7 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 அறிவிப்புகளில் 3 அறிவிப்புகள் மாநில அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த அனுமதியினை விரைந்து பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

புதியதாக அறிவிக்கப்பட்ட தொழிற்பேட்டைகளுக்கான நிலங்கள் கண்டறியப்பட்டு உரிய அனுமதிகள் அளிக்கப்பட்டுள்ளது. அதில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு பணிகளை விரைந்து மேற்கொண்டு, தொழில் நிறுவனங்களுக்கு மனைகளை ஒதுக்க வேண்டும். அரசு அறிவித்த சிறு குழுமங்கள் மற்றும் பெரு குழுமங்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்.

தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையினை உடனடியாக பெற்று திட்டத்தினை விரைந்து செயல்படுத்த வேண்டும்.

குழும வளர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.12.37 கோடி மாநில அரசு மானியத்துடன் மொத்தம் ரூ.148.25 கோடி மதிப்பீட்டில் 28 பொது வசதி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதுபோல், ரூ.24.37 கோடி மாநில அரசு மானியத்துடன் மொத்தம் ரூ.207.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் 15 பொது வசதி மையங்களுக்கான பணிகளை விரைந்து முடித்து செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும்.

குறுந்தொழில் குழுமங்களுக்காக பொது உற்பத்தி மையங்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் ரூ.14.87 கோடி மாநில அரசு மானியத்துடன் மொத்தம் ரூ.33.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் 8 பொது உற்பத்தி மையங்களுக்கான பணிகளை விரைந்து முடிக்கப்பட வேண்டும். மேலும், புதியதாக அறிவிக்கப்பட்ட 6 பொது உற்பத்தி மையங்களுக்கான பணிகளுக்கான உரிய அனுமதிகளை விரைந்து பெற்று பணிகளை துவக்க வேண்டும்.

தொழிற்பேட்டைகளில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காதவாறு வடிகால்கள் தூர்வாரப்பட வேண்டும். தொழிற்பேட்டைகளில் உள்ள திறந்தவெளி நிலங்களிலும், சாலை ஓரங்களிலும் மரங்கள் நடப்பட வேண்டும். புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க திட்டமிடப்படும்போது மின்நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்களுக்கான நிலங்கள் ஒதுக்கப்பட வேண்டும். செயல்பாட்டில் உள்ள தொழிற்பேட்டைகளில் தேவைக்கேற்ப மின்வசதி, சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திறன்களை அதிகரிக்க வேண்டும்.

கிளை மேலாளர்கள் உள்ளூர் தொழில்களை வளர்தெடுக்கும் வகையில் குறுங்குழுமங்களை உருவாக்க வேண்டும். புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களை அனுகி நிலங்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மனைத் தொகை, பராமரிப்புக் கட்டணம், வாடகைக் கட்டணம் நிலுவைகள் ஏதும் இன்றி உடனடியாக வசூலிக்கப்பட வேண்டும்.

தொழிற்பேட்டைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு கொவிட்–19 தடுப்பூசி பூஸ்டர் டோஸ் செலுத்துவதற்கு சிறப்பு முகாம்களை அமைக்க வேண்டும். மேலும், தொழிலாளர்களுக்கு தடுப்பூசி – பூஸ்டர் டோஸ் செலுத்துவதற்கு தொழில் நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட வேண்டும்." எனத் தெரிவித்தார்.

இதற்கு முன்பாக, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் உள்ள சிட்கோ மருத்துவமனையில் கொவிட்–19 பூஸ்டர் தடுப்பூசி முகாமினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் **திரு. தா.மோ அன்பரசன்** அவர்கள் துவக்கி வைத்து, தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள 20 தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை பத்திரங்கள் மற்றும் தொழில் மனை ஒப்படைப்பு அனுமதி ஆணை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர், திரு.அருண்ராய், இ.ஆ.ப., சிட்கோ, மேலாண்மை இயக்குநர், திரு.ஆனந்த் இ.ஆ.ப., பொது மேலாளர், செல்வி. ரா.பேபி, மேற்பார்வை பொறியாளர் (பொறுப்பு) திரு. சோமசுந்தரம், சிட்கோ கிளை மேலாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in